
**Perbadanan Insurans Deposit Malaysia**

மலேசியாவில் உங்களின் காப்புறுதியும் வைப்புத்தொகைகளும் பாதுகாக்கப்படுகின்றன




# வைப்புத்தொகை காப்புறுதி முறை

# வைப்புத்தொகை காப்புறுதி முறை



## PIDM என்பது என்ன?

PIDM என்பது, மலேசிய வைப்புத்தொகை காப்புறுதிக் கழகச் சட்டத்தின் (PIDM சட்டம்) கீழ் 2005-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஓர் அரசாங்க நிறுவனம்.


PIDM இரண்டு முறையில் உங்களுக்கு பாதுகாப்பு வழங்குகிறது:

- வைப்புத்தொகை காப்புறுதி முறையின் (DIS) கீழ் வைப்புத்தொகையாளர்
- தக்காஃபுல் மற்றும் காப்புறுதி சலுகைகள் பாதுகாப்பு முறையின் (TIPS) கீழ் தக்காஃபுல் மற்றும் காப்புறுதி பாலிசிகளின் உரிமையாளர்


## உங்களுக்கு PIDM எத்தகைய பாதுகாப்பை வழங்குகிறது?

PIDM ஓர் உறுப்பு வங்கி திவாலாகிவிட்ட பட்சத்தில், **RM250,000** வரையிலான உங்களது தகுதிபெற்ற வைப்புத்தொகைகளைப் பாதுகாக்கும்.

### வைப்புத்தொகை காப்புறுதி முறை (DIS) எவ்வாறு செயல்படுகிறது:




- இந்த பாதுகாப்பு இயல்பாகவே வழங்கப்படுகிறது - விண்ணப்பம் மற்றும் கட்டணம் தேவையில்லை.
- ஓர் உறுப்பு வங்கி திவாலாகிவிட்ட பட்சத்தில், நீங்கள் எந்த ஒரு கோரிக்கைக்கும் விண்ணபிக்க வேண்டியதில்லை.
- சம்பந்தப்பட்ட உறுப்பு வங்கியின் வைப்புத்தொகை குறிப்புக்கள் அடிப்படையில் PIDM பணம் வழங்கும்.
- எவ்வாறு, எங்கே மற்றும் எப்போது பணம் வழங்கப்படும் என்பதை PIDM அறிவிக்கும்.



## எத்தகைய பாதுகாப்பு?

**ஓர் உறுப்பு வங்கிக்கு ஒரு வைப்புத்தொகையாளர்** எனும் அடிப்படையில் உங்களின் தகுதிபெற்ற ரிங்கிட் மலேசியா (RM) ஆதிக்கத்தில் அல்லது வெளிநாட்டு நாணய வைப்புத்தொகைள் RM250,000 வரை பாதுகாக்கப்படுகின்றன. இந்த வரம்பு ஒரு வைப்புத்தொகையின் மூலத்தொகை மற்றும் வட்டி/லாபம் இரண்டையும் உள்ளடக்கி இருக்கிறது. PIDM-மினால் பாதுகாக்கப்பட்ட வைப்பு பொருட்கள் அல்லது கணக்குகளை கீழே காணலாம்:

- சேமிப்பு கணக்குகள்
- நடப்பு கணக்குகள்
- நிரந்தர வைப்புத்தொகை

**ஓர் உறுப்பு வங்கியில்** பல கணக்குகளை வைத்திருக்கும் ஒரு வைப்புத்தொகையாளருக்கு எவ்வாறு தனித்தனி வைப்புத்தொகை பாதுகாப்பு கிடைக்கிறது என்பதற்கான ஓர் உதாரணத்தை கீழே காணலாம்.

| XYZ வங்கியில் வைப்புத்தொகையாளர் | மாதிரி வைப்புத் தொகை | வைப்புத்தொகை கணக்குகள் | தொகை (RM) | காப்புறுதி செய்யப்பட்டது (RM) |
|---|---|---|---|---|
| ராம் | தனிப்பட்ட | சேமிப்பு | 100,000 | 250,000 |
| | | நடப்பு | 100,000 | |
| | | நிரந்தர வைப்புத்தொகை | 100,000 | |
| ராம் மற்றும் மனைவி | கூட்டு | நிரந்தர வைப்புத்தொகை | 220,000 | 220,000 |
| ராம், லியோங் & கோ (சட்ட நிறுவனம்) | தொழில் முறை | நடப்பு | 280,000 | 250,000 |
| ராம் சகோதரர்கள் | நிறுவனம் | நடப்பு | 180,000 | 180,000 |
| **மொத்த வைப்புத்தொகை** | | | **980,000** | |
| **PIDM-மினால் பாதுகாக்கப்பட்ட மொத்த வைப்புத்தொகைகள்** | | | | **900,000** |

## எது பாதுகாக்கப்படவில்லை?

- முதலீட்டு கணக்குகள்
- யூனிட் டிரஸ்டுகள், நிதி சந்தைப் பணம் மற்றும் பங்குகள்
- தங்கம் தொடர்பான முதலீட்டு பொருட்கள் அல்லது கணக்குகள்
- மலேசியாவில் செலுத்தப்படாத வைப்புத்தொகைகள்

*உங்கள் வங்கியில் பாதுகாக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்படாத வைப்பு பொருட்கள் அல்லது வைப்புத்தொகை கணக்கு பட்டியலை பார்க்கவும்.*



## நான் என்ன செய்யலாம்?

✓ உங்கள் வங்கி ஒரு PIDM-மின் உறுப்பினரா என சரிபார்க்கவும் - இதன் பட்டியல் PIDM-மின் அகப்பக்கத்தில் கிடைக்கும்.


✓ PIDM-மின் உறுப்பியத்துவ அடையாளத்தைக் காணுங்கள்

MEMBER / AHLI
成 员 / உறுப்பினர்
PIDM
Perbadanan Insurans Deposit Malaysia
Protecting Your Insurance And Deposits In Malaysia

✓ உங்கள் வைப்புத்தொகை அல்லது வைப்பு பொருட்கள் PIDM-மினால் பாதுகாக்கப்படுகிறதா என்பதை உங்கள் வங்கியில் கேட்கவும்.

**நீங்கள் ஒரு புதிய வைப்புத்தொகை கணக்கு திறக்கும்போது உங்கள் வங்கி செய்ய வேண்டியது:**

1. PIDM-மினால் வைப்புதொகை கணக்கு பாதுகாப்பு பெறுகிறதா இல்லையா என்பதை உங்களுக்கு தெரிவிப்பது
2. PIDM-மின் ஒரு சிறு கையேடு உங்களுக்கு வழங்குவது
3. நீங்கள் மேலே உள்ள (1)-ஐ அறிந்திருக்கின்றீர்களா மற்றும் மேலே உள்ள (2)-வது உங்களுக்கு வழங்கப்பட்டதா என்ற உத்தரவாதத்தை உங்களிடமிருந்து பெறுவது




PIDM
Perbadanan Insurans Deposit Malaysia
மலேசியாவில் உங்களின் காப்புறுதியும் வைப்புத்தொகைகளும் பாதுகாக்கப்படுகின்றன

**தொடர்பு மற்றும் பொதுவிவகாரப் பிரிவு**
Level 9, Bangunan AICB, 10, Jalan Dato' Onn,
50480 Kuala Lumpur.
**தொலைபேசி:** 603-2173 7436 / 2265 6565 **தொலைநகல்:** 603-2173 7527 / 2260 7432